செ.வெ.எண்: 66　　　　　　　　　　　　　　　　　　　நாள்: 24.06.2016

## புதுக்கோட்டை மாவட்டத்தில் தொழில் முனைவோர் விழிப்புணர்வு பயிற்சி முகாம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள்தலைமையில் நடைபெற்றது.

புதுக்கோட்டை மேலராஜ வீதி சில்வர் மஹாலில் தொழில் முனைவோர் மேம்பாட்டு நிறுவனம், தொழில் வணிகத்துறை, மாவட்ட தொழில் மையம் மற்றும் மாவட்ட சிறு தொழில் அதிபர்கள் சங்கம் ஆகியோரை இணைந்து நடத்தும் தொழில் முனைவோர் விழிப்புணர்வு பயிற்சி முகாம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (24.06.2016) நடைபெற்றது.

இந்த தொழில் முனைவோர் விழிப்புணர்வு பயிற்சி முகாமினை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் துவக்கி வைத்து , தொழில் முனைவோர் கையேட்டினை வெளியிட்டு பேசியதாவது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில்களை தமிழகத்தில் அனைத்து மாவட்டங்களிலும் குறிப்பாக பின்தங்கிய மாவட்டங்களில் மேம்படுத்த வேண்டி நீட்ஸ் முதலான திட்டங்கள் பலவற்றை அறிவித்துள்ளார்கள். மேற்படி திட்டங்களின் வாயிலாகத் தொழில் நிறுவனங்களைத் துவங்க விருப்பமுள்ள தொழில் முனைவோர்களை அடையாளம் கண்டு அவர்களுக்கு ஒருநாள் தொழில் முனைவோர் வழிகாட்டுதல் மற்றும் ஊக்குவிப்பு பயிற்சி நடத்திட அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதனடிப்படையில் நமது மாவட்டத்தில் தொழில் முனைவோர் மேம்பாட்டு நிறுவனம், தொழில் வணிகத்துறை, மாவட்ட தொழில் மையம் மற்றும் மாவட்ட சிறு தொழில் அதிபர்கள் சங்கம் ஆகியோரை இணைந்து நடத்தும் தொழில் முனைவோர் விழிப்புணர்வு முதற்கட்ட பயிற்சி முகாம் இன்று துவக்கி வைக்கப்பட்டுள்ளது.



புதுக்கோட்டையில் மாவட்ட தொழில் முனைவோர் மேம்பாட்டு நிறுவனம், தொழில் வணிகத்துறை, மாவட்ட தொழில் மையம் மற்றும் மாவட்ட சிறு தொழில் அதிபர்கள் சங்கம் ஆகியோர் இணைந்து நடத்திய தொழில் முனைவோர் விழிப்புணர்வு பயிற்சி முகாமை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் துவக்கி வைத்து, தொழில் முனைவோர்க்கான கையேட்டினை வெளியிட்டார்.

இதனை தொடர்ந்து 29.06.2016 அன்று பொன்னமராவதி, சந்தைப்பேட்டை மங்கைநாயகர் திருமணமண்டபத்தில் இரண்டாம் கட்ட பயிற்சி முகாமும், 05.07.2016 அன்று அறந்தாங்கி, மலர் கல்யாண திருமணமண்டபம், கட்டுமாவடிரோடு (கோர்ட் அருகில்) மூன்றாம் கட்ட பயிற்சி முகாமும் நடத்தப்பட உள்ளது.

மேலும், இந்த பயிற்சியை மாவட்டதொழில் மையம் உதவியுடன் மாவட்ட சிறுதொழில் அதிபர்கள் நலச்சங்கம் மூலமாக சுமார் 300 நபர்களுக்கு குறைவில்லாமல் பயிற்சி அளிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. முதற்கட்ட பயிற்சி வகுப்பில் சொந்தமாகத் தொழில் துவங்குவதின் நன்மைகள், தொழில் வாய்ப்புகள், தொழில் தேர்ந்தெடுத்தல், தொழில் முனைவோருக்கு அரசு மற்றும் பிற நிறுவனங்களின் உதவிகள், திட்டங்கள் மற்றும் மானியங்கள் உள்ளிட்ட அனைத்து விவரங்கள் பற்றியும் விவரிக்கப்பட்டது. இப்பயிற்சியின் இறுதியில் தொழில் துவங்க விரும்புவர்களின் பெயர்கள் பெறப்பட்டு இரண்டாம் கட்டபயிற்சிக்கு அழைக்கப்படுவார்கள். எனவே படித்த தொழில் துவங்க ஆர்வமுள்ள 18 வயதுக்குமேல் 45 வயதுக்குள் உள்ள ஆண், பெண் இரு பாலரும் இப்பயிற்சியில் கலந்துகொண்டு முறையாக கற்று பயன்பெறுமாறு வேண்டும் என்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் பேசினார்.

பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் அமைக்கப்பட்ட தமிழக அரசின் திட்டங்கள் மற்றும் சாதனைகள் குறித்த புகைப்படக் கண்காட்சியினை பார்வையிட்டார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட சிறு தொழில் அதிபர்கள் நலசங்கத் தலைவர் திரு.ராஜகுமார், பொது மேலாளர் (மாவட்ட தொழில் மையம்) திரு.மகாலிங்கம், இணை பதிவாளர் (கூட்டுறவுத்துறை) திருமதி.மிருணாளினி, இணைபதிவாளர் (மாவட்ட கூட்டுறவு வங்கி) திருமதி. பால்வடிவு, உதவி இயக்குநர் மற்றும் சிட்கோ கிளை மேலாளர் திருமதி.திரிபுரசுந்தரி, மாவட்ட சிறு தொழில் அதிபர்கள் நலசங்கச் செயலாளர். திரு.முரளிதரன், செந்துூரான் பாலிடெக்னிக் கல்லூரியின் செயல் அலுவலர் திரு.வைரவன் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**